மதுரை மத்திய கூட்டுறவு வங்கி.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மத்திய கூட்டுறவு வங்கியில் சம்பளத் தகராறு ஏற் பட்டதா ?

(இ) எந்த அடிப்படையில் தற்போது சம்பள விகிதம் உள்ளது ?

(உ) சம்பள விகிதங்களை எப்படி திருத்தி அமைக்க வேண்டுமென ஊழியர்கள் கேட்கின்றனர் ?

(எ) தமிழகத்தில் மற்ற கூட்டுறவு வங்கிகளில் ஊழியர்களின் சம்பள விகிதங்கள் எப்படி உள்ளன ?

(ஐ) சர்க்கார் தலையிட்டு ஏதேனும் யோசனை கூறியதா ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) and (உ) ஒரு விவர அறிக்கை [a] சட்டமன்றத்தின் முன் வைக்கப் பட்டுள்ளது.

(எ) கூட்டுறவு மத்திய வங்கிகள் அவைகளுடைய ஊழியர்களுக்கான சம்பள விகிதங்களை அவைகளின் நிதி நிலைமைக்கேற்ப நிர்ணயம் செய் திருக்கின்றன. அதனால் ஒரே மாதிரியான ஊழியர்களுக்கு நிர்ணயித்த சம்பள விகிதங்கள் ஒரு வங்கிக்கும் மற்றொரு வங்கிக்கும் வேறுபட்டு இருக்கும்.

(ஐ) இல்லை.

Lorry accidents near V.O.C. College, Tuticorin

* 330. Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) the number of lorry accidents that took place opposite to V.O.C. College, Tuticorin in September and October 1968;

(b) whether it is correct that the formation of the road is the main reason for such accidents ; and

(c) if so, the action taken thereon ?

தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி அருகே லாரி விபத்து.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி முன்பு 1968 செப்டம்பர், அக்டோபரில் எத்தனை லாரி விபத்துக்கள் நடந்தன ?

(இ) சாலையமைப்புதான் விபத்துக்குக் காரணம் என்பது சரியா?

(உ) ஆமெனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் :

(அ) 1968, செப்டம்பரில் லாரி விபத்து எதும் நிகழவில்லை. ஆனால் 1968 அக்டோபரில் மூன்று லாரி விபத்துக்கள் ஏற்பட்டன.

(இ) இல்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

---

a Printed as Appendix II on page 268.